செ.வெ.எண்: 84/ மே /2020 நாள்:28.05.2020

**திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றியம், பாச்சூர் கிராமத்தில் பொதுப்பணித்துறை - நீர்வள ஆதாரத்துறையின் மூலம் முதலமைச்சரின் குடிமராமத்து திட்டத்தின் கீழ் பெருவளை வாய்க்காலில் அமைந்துள்ள சரசவல்லி குமிழி மறுகட்டமைத்தல் பணி ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் நடைபெற்று வருவதை, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், தமிழ்நாடு நீர்வளபாதுகாப்பு மற்றும் ஆறுகள் புனரமைப்பு கழக நிர்வாக இயக்குநர் டாக்டர்.கே.சத்தியகோபால்,இ.ஆ.ப., அவர்கள் இன்று(28.05.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

--------------

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுப்பணித்துறையின் மூலம் குடிமராமத்து திட்டத்தின் கீழ் விவசாய பாசன வாய்கால்கள் விரைவில் தூர்வார நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்கள்.

அதன்படி திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் வட்டத்தில் பாச்சூர் கிராமத்தில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் ரூபாய் 25 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு பாசன சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு பாசன சங்க பிரதிநிதிகள் மூலமாக இப்பணிகள் நடைபெற்று வருகிறது.

இப்பணிகளால் பெருவளை வாய்க்காலில் மைல் 6/7ல் இருந்து பிரியும் சரசவல்லி கிளைவாய்க்காலின் மதகை கட்டவும் மேலும் இம்மதகிற்கு எதிர்புறம் உள்ள மேட்டு பாசன வாய்க்காலின் தடுப்பு சுவரை கட்டவும் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிகள் நிறைவு பெறும் போது மண்ணச்சநல்லூர் வட்டத்திலுள்ள பாச்சூர் மற்றும் சரசவல்லி ஆகிய கிராமங்களில் உள்ள 22.27 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும். 300 ஏக்கர் நிலம் பயிர் வெள்ளத்தில் மூழ்காமல் பாதுகாக்கப்படும்.

மேட்டூர் அணையிலிருந்து ஜூன் மாதம் விவசாய பாசனத்திற்கு நீர் திறக்கப்படவுள்ளதால் இப்பணிகள் தரமானதாகவும், விரைந்து முடிக்க வேண்டும் என தமிழ்நாடு நீர்வளபாதுகாப்பு மற்றும் ஆறுகள் புனரமைப்பு கழக நிர்வாக இயக்குநர் டாக்டர்.கே.சத்தியகோபால்,இ.ஆ.ப., அவர்கள் பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

இவ்வாய்வின் போது பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் திரு.ஆர்.திருவேட்டைசெல்லம், பொதுப்பணித்துறை ஆற்றுப்பாதுகாப்புக்கோட்ட செயற்பொறியாளர் திரு.பாஸ்கர், உதவி செயற்பொறியாளர் திரு.ஜெயராமன், பாசன சங்கத்தை சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் பலர் உடனிருந்தனர்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சிராப்பள்ளி.**